யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | விவசாய விஞ்ஞானம் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

பரீட்சார்த்திக்கான அறிவுறுத்தல்:-


❖ 01 - 50 வரையான வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிவு செய்க.

01) தாவர உடலில் அதிகளவில் காணப்படும் காபன், ஐதரசன், ஒட்சிசன் போன்ற மூலகங்களை தாவரம் பெற்றுக்கொள்வது
(1) மண்ணிலிருந்து ஆகும்.
(2) மண்ணீரிலிருந்து ஆகும்.
(3) வளியிலிருந்து ஆகும்.
(4) வளியிலிருந்தும் மண்ணீரிலிருந்தும் ஆகும்.
(5) மண்ணிலிருந்தும் நீரிலிருந்தும் ஆகும்.

02) வளர்ப்பூடக தயாரிப்பில் ஏகார் பயன்படுத்தப்படுவது
(1) விற்றமின் வழங்கியாக
(2) திண்மமாக்கும் கருவியாக
(3) ஈரமாக்கும் கருவியாக
(4) நொதிக்கச் செய்யும் பதார்த்தமாக
(5) தொற்று நீக்கியாக

03) வித்து வங்கிகள்
(1) உற்பத்திகளை சேமிக்கும் இடம்
(2) வெளிநிலை பரம்பரையலகு காப்பிடம்
(3) உள்நிலை பரம்பரையலகு காப்பிடம்
(4) விவசாயிகள் பண வைப்புச் செய்யுமிடம்
(5) விவசாயத் திணைக்களத்தின் பிரத்தியேக கூடம்

04) இலங்கையின் உலர் வலயத்தில் பொதுவாகக் காணப்படும் செங்கபில வகை மண் அழைக்கப்படுவது, $(USDA)$
(1) $Tropaqualfs$
(2) $Haplustalfs$
(3) $Rhodustalf$
(4) $Calsic\ Brown\ soil$
(5) $Redish\ brown\ soil$

05) 

$(\boldsymbol{A})$ $(\boldsymbol{B})$

படத்தில் காட்டப்பட்ட பதியமுறை இனப்பெருக்க கட்டமைப்புகள்
(1) $A, B$ ஓடிகள்
(2) $A, B$ உறிஞ்சிகள்
(3) $A$ ஓடி $B$ உறிஞ்சி
(4) $A$ வேர்த்தண்டு கிழங்கு $B$ ஓடி
(5) $A$ வேர்த்தண்டு கிழங்கு $B$ உறிஞ்சி

06) பைருவிக் அமிலத்தின் காற்றின்றிய ஒட்சியேற்றம் காரணமாக உருவாகும் விளைபொருட்கள்
(1) ஒட்சிசன், $ATP$
(2) $ATP, NADH_2$
(3) $FADH_2, NADH_2$
(4) மெதனோல், ஒட்சிசன்
(5) எதனோல், $CO_2$

07) ஆளுகை சூழல் விவசாயம் தொடர்பாக சரியானது,

(1) பீடைநாசினிகளின் பிரயோகத்தை அதிகரித்து உயர்ந்த தரமான விளைச்சல்களைப் பெறலாம்.
(2) $CO_2$ இன் செறிவை உயர்மட்டத்தில் பேணுவதன் மூலம் ஒளித்தொகுப்பை அதிகரிக்கலாம்.
(3) உயிர் இரசாயன செயற்பாடுகள் மந்தமாக நிகழ்வதால் விளைச்சல் குறுகிய காலத்தில் கிடைக்கும்.
(4) மழைவீழ்ச்சி கட்டுப்படுத்தப்படுவதால் தொடர்ச்சியாக விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியாது.
(5) உயர் வெப்பநிலை, தாழ் ஈரப்பதன் என்பவற்றால் தண்டுத்துண்டம் வேர்விடல் அதிகரிக்கும்.

08) கமநல சேவை திணைக்களத்தினால் விவசாயத்திற்கு ஆற்றப்படும் சேவை / செயற்பாடாக **அமையாதது**

(1) விவசாய உள்ளீடுகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்
(2) சிறு நீர்பாசன திட்டங்களை புனரமைப்புச் செய்தல்
(3) விவசாய விளைச்சல்களை சந்தைப்படுத்தி நியாயமான விலைகளை பெற்றுத்தரல்
(4) விவசாய காணி இடாப்பை தொடர்ச்சியாக பேணுதல்
(5) காலநிலைக்கேற்ப நாட்டப்பட வேண்டிய பயிர்களை விவசாயிகளிற்கு சிபாரிசு செய்தல்.

09) ஈர, உலர் வெப்பமானி தொடர்பாக பின்வருவனவற்றில் சரியானது,

(1) ஈர வெப்பமானியில் பாத இரசமும் உலர் வெப்பமானியில் அற்ககோலும் அளவிடும் திரவமாக பயன்படும்.
(2) எந்த சந்தர்ப்பத்திலும் ஈர, உலர் வெப்பமானியின் வாசிப்புகள் சமனாக அமையாது.
(3) சாரீரப்பதன் அதிகரிக்கும் போது நிச்சயமாக ஈர, உலர் வெப்பமானியின் வாசிப்புக்களிற் கிடையேயான வித்தியாசம் உயர்வடையும்.
(4) நாளொன்றில் வாசிப்பைப் பெற்ற பின் வெப்பமானியை மீண்டும் செப்பம் செய்தல் அவசியமில்லை
(5) இதனை பயன்படுத்தி அந்நாளின் உயர்வு வெப்பநிலை, சாரீரப்பதன் வளிமண்டல வெப்பநிலை கணிக்க முடியும்.

10) தாவரத்தின் வேர் விருத்தியிலும் பரம்பலிலும் அதிக செல்வாக்கை உடைய மண் காரணி

(1) மண் ஈரலிப்பு
(2) மண்ணின் தோற்ற அடர்த்தி
(3) மண் வெப்பநிலை
(4) மண் மூல நிரம்பல் சதவீதம்
(5) மண்ணிறம்

11) வயற் கொள்ளளவு என்பதால் விளக்கப்படுவது,

(1) நன்மண் கொண்ட வயல் நிலத்தினால் உச்சமாகப் பற்றிக் கொள்ளக்கூடிய நீரின் அளவு
(2) பருகுநீர் மற்றும் புவியீர்ப்பு கீழ் வடிந்தோடிய நீரின் உள்ளடக்கம்
(3) மண்ணீரில் தாவரத்தினால் அகத்துறிஞ்சப்படக்கூடிய மயிர்த்துளை நீர்
(4) முற்றாக நிரம்பல் நிலையிலுள்ள மண்ணிலிருந்து புவியீர்ப்பு நீரை வெளியேற்றிய பின்னரான எஞ்சிய நீர்
(5) குறிப்பிட்ட பயிர் கொண்ட நிலத்திலுள்ள தாவர போசணையின் அளவு

12) மண்ணில் பீடைநாசினிகள் படிப்படியாக உடைக்கப்படுவது

(1) தரை நீரினால்
(2) மண் புழுக்களினால்
(3) பற்றீரியா, பங்கசுக்களினால்
(4) மண் கூழ்நிலைத் துணிக்கைகளினால்
(5) சேதனப் பொருட்களினால்

13) விவசாயி ஒருவர் பயிர்நிலத்திற்கு அசேதன பசளைகளை விடுத்து சேதனப்பசளையை பயன்படுத்துவாராயின் அம்மண்ணில் ஏற்படக்கூடிய மாற்றம்

(1) மண்ணிற்கு கூடிய நைதரசன் பசளை வழங்கப்படும்.

(2) தாவரப் போசணைகள் இலகுவாகவும் உறிஞ்சப்படக்கூடிய வடிவில் மாற்றமடைதல்.

(3) மண்ணின் $pH$ ஆனது 7 இற்கு அதிகரித்தல்.

(4) மண்நுண்ணங்கிகள் பெருக்கமடைதல், நீர் பற்றும் திறன் மேம்படல்.

(5) குறைந்தளவு பசளையில் கூடியளவான போசணைப் பொருட்கள் அடங்குதல்.

14) காலநிலை மாற்றத்தை வெற்றி கொள்ளக்கூடிய வகையில் விவசாயத் திட்டமிடல் மேற்கொள்ளல் அவசியம். பின்வருவனவற்றில் காலநிலை மாற்றத்தின் விளைவாக **அமையாதது,**

(1) மழைவீழ்ச்சிக் கோலத்தில் மாற்றம்

(2) வெள்ளப்பெருக்கு அபாயம்

(3) கடல் நீர்மட்டம் உயருதல்

(4) பச்சை வீட்டு விளைவால் புவி வெப்பம் அடைதல்

(5) ஓசோன்படை தேய்வு

15) பசளை பை ஒன்றில் "$23 - 19 - 17$" எனக் குறிப்பிடப்பட்டிருந்தால்

(1) $25\% \, N$, $19\% \, P_2O_5$, $17\% \, K_2O$ ஆகியவற்றைக் கொண்டது.

(2) $23\% \, N$, $19\% \, K$, $17\% \, P$ ஆகியவற்றைக் கொண்டது.

(3) தாவர நைதரசனை $23\%$ உம் பொட்டாசியம் $19\%$ உம் பொசுபரசு $17\%$ உம் வழங்கும்.

(4) $100 \, kg$ உரத்தில் $19 \, kg$ பொசுபரசு காணப்படுகின்றது.

(5) $23\% \, NH_4^+$ வடிவமும் $19\% \, PO_4^{2-}$, $17\% \, K^+$ அயன் வடிவங்களில் காணப்படுகின்றது.

16) இழிவுப் பண்படுத்தலில் பயன்படுத்தக்கூடிய உபகரணம்

(1) வட்டத்தட்டுக் கலப்பை

(2) மண்வெட்டி

(3) சாலிடு கருவி

(4) வட்டத்தட்டு ஹரோ

(5) ஹோவகை உபகரணங்கள்

17) பின்வருவனவற்றில் மண் வளங்குன்றலிற்கு காரணமான நடவடிக்கையாக **அமையாதது**

(1) சேறடித்தல் முறை மூலம் பயிர் செய் நிலத்தை பண்படுத்தல்

(2) ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாவரங்களை குறிப்பிட்ட நிலத்தில் மாறி மாறிப் பயிரிடல்

(3) சாய்வான பகுதிகளில் உச்சப் பண்படுத்தலை மேற்கொண்டு பயிர் செய்தல்

(4) உவர் தன்மை கூடிய மண்ணில் நீரை தேக்கி வடியவிடல்

(5) மண்ணிற்கு சேதனப் பசளைகளை விட அசேதன பசளைகளை கூடிய அளவில் பிரயோகித்தல்

18) ஆட்டீசியன் நீரேந்தி தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - ஆட்டீசியன் கிணறுகளில் நீர் ஒருபோதும் வற்ற மாட்டாது.

B - ஊடுபுகவிடாத பாறைப்படைகளிற்கிடையில் நீர் காணப்படுவதால் இந்நீர் உயர் அமுக்கத்தில் காணப்படும்.

C - ஊடுபுகவிடாத பாறைப் படுக்கைகளிடையே நீர் செல்வதற்கு காரணம் அவற்றின் வாய் மலைப் பாறைகளின் நீர்தாங்கு பகுதிகளில் காணப்படுதல்

தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானது அல்லது சரியானவை,

(1) A மட்டும் (2) B மட்டும் (3) A, B மட்டும்

(4) B, C மட்டும் (5) A, B, C எல்லாம்

19) பயிர்செய் நிலம் ஒன்றிற்கு பம்பி ஒன்றிலிருந்து வழங்கப்பட்ட நீரின் அளவு $1000\ell$ கொண்டு செல்லல் வினைத்திறன் $75\%$ எனில் பயிர் நிலத்தை அடைந்த நீரின் அளவு யாது?

(1) $750 \, \ell$ (2) $1000\ell$ (3) $1250\ell$ (4) $1500\ell$ (5) $1750\ell$

20) அரும்பொட்டு வகைகளில் ஒன்றாக அமைவது,

(1) துண்டொட்டு (2) பசுமையொட்டு (3) அணை ஒட்டு
(4) சவுக்குநா ஒட்டு (5) முடியொட்டு

21) பயிர்த்தாபிப்பு தொடர்பான சரியான கூற்று,

(1) வீச்சு விதைப்பில் வித்துக்கள் சீரான ஆழத்தில் பதிவதால் அறுவடை சீராக இருக்கும்.
(2) நடுகைக் குழிகளில் நடும்போது எள் போன்ற சிறிய வித்துக்களை சீராக தாபிக்க முடியும்.
(3) கைகளால் விதைக்கும் போது உரிய இடைவெளிகளில் வித்துக்களை இடமுடியும்.
(4) சேற்றுநிலப் பயிர்களை தாபிப்பதற்கு $FMRC$ இரு வரிசை விதையிடு கருவியை பயன்படுத்த முடியும்.
(5) ஆறு வரிசை கொண்ட மேளச் சில்லு விதையிடு கருவி மேட்டுநிலப் பயர் தாபிப்பதற்கு உகந்தது.

22) உயரமான தூயவழிச் சந்ததித் தாவரம் ஒன்றுடன் இதரநுக உயரமான தாவரம் ஒன்றுடன் இனக்கலப்பு செய்யப்பட்டது. $F_1$ சந்ததியில் சமநுக தனியன்கள் தோன்றும் நிகழ்தகவு

(1) $0$ (2) $\frac{1}{4}$ (3) $\frac{1}{2}$ (4) $\frac{1}{3}$ (5) $1$

23) நீர் ஊடகப் பயிர்செய்கையில் பேணப்பட வேண்டிய $pH, EC(ds/m)$ வீச்சுக்களை முறையே சரியாகக் குறிப்பிடுவது,

(1) $6.5 - 8.5, 0.8 - 3.0$ (2) $5.5 - 7.0, 1.0 - 4.0$
(3) $7.5 - 8.5, 0.5 - 1.5$ (4) $5.5 - 8.5, 0.5 - 2.5$
(5) $6.0 - 8.0, 2.0 - 4.0$

24) வேர் மயிரிலிருந்து காழ் இழையம் வரையான நீரின் ஆரைக்குரிய கடத்தலில் பெருந் தடுப்பாக காணப்படும் இழையம்

(1) வேர்மயிர்க் கலங்கள்
(2) பட்டைக் கலங்கள்
(3) பரிவட்டவுறை
(4) அகத்தோல் கலங்கள்
(5) மேற்றோல் கலங்கள்

25) 

படத்தில் காட்டப்பட்ட அமைப்பு

(1) ஒற்றைத்தட்டு ஆழ் போசணை $DFT$ பயிர்ச் செய்கைத் தொகுதி
(2) ரெஜபோம் பெட்டியில் போசணை சுற்றியோட்டம் நிகழாத பயிர் வளர்ப்பு
(3) கிழங்குப் பயிர்ச்செய்கைக்கான சுற்றியோட்டம் நிகழும் பயிர்வளர்ப்பு
(4) நிலைக்குத்து குழாய்களில் இடம்பெறும் பயிர்ச்செய்கைத் தொகுதி
(5) பல்தட்டு $DFT$ பயிர்ச்செய்கைத் தொகுதி

26) பீடைக் கட்டுப்பாடு தொடர்பான தரப்பட்டுள்ள கூற்றுக்களைக் கருதுக.

A - சாற்றை உறிஞ்சிக் குடிக்கின்ற பீடைகளைக் கட்டுப்படுத்த கந்தகம், பாசாணவகை பீடைநாசினிகள் பயன்படுத்த முடியும்.

B - இரைப்பை நஞ்சுகள் உணவுக் கால்வாய்த் தொகுதியால் உடலில் உறிஞ்சப்படும்

தரப்பட்டுள்ள கூற்றுக்கள் தொடர்பாக சரியானது

(1) A சரி B தவறு
(2) B சரி A தவறு
(3) A, B இரண்டும் சரி
(4) A, B சரி A யினால் B மேலும் விளக்கப்படுகின்றது.
(5) A, B சரி B யினால் A மேலும் விளக்கப்படுகின்றது.

27) தரப்பட்டுள்ள களைக்கூட்டத்தில் புல்வகை, கோரைவகை மற்றும் அகன்ற இலைக் களைகளை முறையே குறிப்பது

(1) *Echinochloacrus - galli, Cyperus iria, Mimosco pudica*

(2) *Cyperus rotundum, Tridax procumbens, Osimum sanctum*

(3) *Salvinia molesta, Mimosco pudica, Cyperus rotundum*

(4) *Cyperus iria, Echinochloacrus - galli, Salvinia molesta*

(5) *Ischaemum rugasum, Digitaria adscendens, Cynodon dactylon*

28) தாவரங்களில் பொதுவாக காணப்படும் நோய் அறிகுறிகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - கணுவிடைகளிற்கிடையேயான தூரம் குன்றுதல்.

B - இலைகளில் நிறப்பொருட்கள் உருவாதல்.

C - இலைகள் சிறுத்து தாவரம் குறளாதல்.

D - பெருந்தொகையான கக்க அரும்புகள் உருவாதல்.

E - வேர்களில் முடிச்சுக்கள் தோன்றுதல்.

தரப்பட்டுள்ளவற்றில் பைற்றோபிளாசுமா நோய் அறிகுறிகளாக அமைவன,

(1) A, B, C மட்டும் (2) A, C, D மட்டும்

(3) B, D, E மட்டும் (4) C, D, E மட்டும்

(5) A, B, D, E மட்டும்

29) அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களை இழிவளவாக்கக் கூடிய முறைகள் என மாணவன் முன்வைத்த கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.

A - சரியான முதிர்ச்சிப் பருவத்தில் அறுவடை செய்தல் மூலம்

B - அதிகாலையில் அறுவடை செய்தல் மூலம்

C - பண்ணையில் விற்பனை செய்வதன் மூலம்

D - சரியான பொதிசெய்யும் நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம்

மேற்குறித்தவற்றுள் சரியான கூற்று / கூற்றுக்கள்

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, B மாத்திரம்

(4) A, D மாத்திரம் (5) A, B, D மாத்திரம்

30) நெல்லை அவிப்பதனால் கிடைக்கக்கூடிய அனுகூலமாக **அமையாதது**

(1) தேறிய அரிசியின் அளவு அதிகமாகும்.

(2) போசணைக் கூறுகள் பாதுகாக்கப்படும்

(3) சமைத்த பின் சோறு பழுதடையும் தன்மை குறைவடையும்

(4) பூச்சித் தாக்கம் குறைவடையும்

(5) இலிப்பேசு நொதியம் பாதுகாக்கப்படும்

31) மிகத் தாழ்ந்த நச்சுத் தன்மையான இரசாயனத்தின் $LD_{50}$ பெறுமானம் ஆக இருக்கக்கூடியது

(1) 0.05 (2) 0.50 (3) 1.00 (4) 1.50 (5) 2.00

32) நெல்லில் பதர் உண்டாதல் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - நெல் தண்டு துளைப்பானின் சேதத்தின் மூலம்

B - குறி உலர்ந்து போதல் மூலம்

C - குறியின் மீது வேறு நெற்பேதத்தின் மகரந்தங்கள் படிவதன் மூலம்

D - பூக்கள் உண்டாகும் பருவத்தில் நைதரசனும் பொற்றாசியமும் அடங்கும் வளமாக்கிகளைப் பிரயோகிப்பதன் மூலம்

மேற்குறித்த கூற்றுகளிடையே மிகச் சரியானவை

(1) A, B ஆகியன மாத்திரம் (2) C, D ஆகியன மாத்திரம்

(3) A, B, C ஆகியன மாத்திரம் (4) A, B, D ஆகியன மாத்திரம்

(5) A, C, D ஆகியன மாத்திரம்

33) கீரை வகைகள் உணவுக்காகத் தயார் செய்யப்படும் போது பெரும்பாலும் மெல்லியதாக நறுக்கப்பட்டுத் தேங்காய் சேர்த்து வறையாகத் தயாரிக்கப்படும். இங்குள்ள போசணை முக்கியத்துவம்

(1) கீரையிலுள்ள நஞ்சியல்புகளை அகற்றுதல்.

(2) மெல்லியதாக நறுக்கப்படுகையில் கீரையிலுள்ள நீரில் கரையத்தக்க விற்றமின்கள் வெளியே வருதல்.

(3) தேங்காயிலுள்ள கொலஸ்ரோல் மட்டத்தை குறைத்து உடலிற்கு உகந்த நிலைக்கு மாற்றுதல்.

(4) கீரையிலுள்ள போசணைப் பொருட்கள் தேங்காய் பாலில் கரைந்து உடலிற்கு உறிஞ்சப்படுதல் எளிதாதல்.

(5) கீரையிலுள்ள கொழுப்பு தேங்காயில் உள்ள புரதத்துடன் சேர்ந்து உடலிற்கு உறுஞ்சுவதற்கான வாய்ப்பு அதிகரித்தல்.

34) வீட்டுத் தோட்டம் ஒன்றில் பொருளாதார பெறுமதிமிக்க பெரிய மரங்களின் கீழ் வளர்க்கக்கூடிய பயிர்வகைகளைக் கொண்ட தொகுதி

(1) வெண்டி, தகக்காளி, இஞ்சி

(2) கத்தரி, மிளகாய், சலாது

(3) சலாது, கோவா, சேம்பு

(4) வாழை, சோளன், கறிமிளகாய்

(5) கரட், புடோல், பயிற்றை

35) கோழி வளர்ப்பு அதிகளவில் மேற்கொள்ளப்படும் மாவட்டம்

(1) குருணாகல் (2) யாழ்ப்பாணம் (3) அனுராதபுரம்

(4) மன்னார் (5) மாத்தளை

36) குறித்த ஓர் விலங்குப் பண்ணையில் செறிவுத் தீனியாக தேங்காய் பிண்ணாக்கு, குரக்கன் என்பன வழங்கப்படுகிறது. இவற்றிலிருந்து விலங்குகள் அதிகம் பெற்றுக் கொள்ளும் போசணைகளை முறையே கொண்டமைந்தது


(1) இலிப்பிட்டு, காபோவைதரேற்று

(2) புரதம், காபோவைதரேற்று

(3) இலிப்பிட்டு, புரதம்

(4) புரதம், விற்றமின்கள்

(5) நார். கனிப்பொருட்கள்

37) 


படத்தில் மாட்டுக் கன்றின் சிக்கலான இரைப்பையின் அமைப்பு காட்டப்பட்டுள்ளது. இதில் $A, B, C, D$ எனக் குறிக்கப்பட்டுள்ள பகுதிகளை சரியாகக் குறிப்பிடுவது

(1) சிறுவலை, அசையூண்வயிறு, துந்தம், சமிக்கும் இரைப்பை

(2) அசையூண்வயிறு, துந்தம், சமிக்கும் இரைப்பை, சிறுவலை

(3) அசையூண்வயிறு, துந்தம், சிறுவலை, சமிக்கும் இரைப்பை

(4) சிறுவலை, துந்தம், சமிக்கும் இரைப்பை, அசையூண்வயிறு

(5) சமிக்கும் இரைப்பை, துந்தம், அசையூண்வயிறு, சிறுவலை

38) இன விருத்திக்கான முட்டைகளைத் தெரிவு செய்தல் தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - முட்டை இடப்பட்டு 7 நாட்களுக்குள் அடை காக்க வைக்கப்படும் முட்டைகளின் பெரிக்கும் சதவீதம் அதிகமாகும்.

B - முட்டைகளின் களஞ்சியக் காலம் அதிகரிக்கும் போது மஞ்சட் கருவின் பருமன் அதிகரிக்கும்.

C - காற்றறை பெரிதாக காணப்படும் முட்டைகள் குஞ்சு பொரிக்கும் வீதம் அதிகம் ஆகும்.

தரப்பட்டுள்ள கூற்றுக்கள் தொடர்பாக சரியானது

(1) A, B மட்டும் (2) B, C மட்டும்

(3) A, C மட்டும் (4) A, B, C எல்லாம் சரி

(5) A, B, C எல்லாம் தவறு

39) பசுவில் கருக்கட்டப்பட்ட நுகத்தை கருப்பையை நோக்கி கடத்தும் அமைப்பு
(1) சூலகம்
(2) கருப்பைக்கொம்பு
(3) பலோப்பியன் குழாய்
(4) கருப்பைக் கழுத்து
(5) யோனிவழி

40) பால் இறங்கல் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் ஓமோன்
(1) லக்ரோசு
(2) ஒட்சிரோசின்
(3) புரோலக்ரின்
(4) அதிரினலின்
(5) இன்சுலின்

41) 
படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம்
(1) இலற்றோ மீற்றர்
(2) அளவுச்சாடி
(3) வெப்பமானி
(4) பியூற்றோ மீற்றர்
(5) இறப்பர் நிறுத்தி

42) கொக்கிடியோசிஸ் நோய் ஏற்படுவது
(1) கோழிகளின் சுவாசப்பையில் ஆகும்.
(2) பசுக் கன்றுகளின் உணவுக் கால்வாய்த் தொகுதியில் ஆகும்.
(3) மாடுகளில் அசையூன் வயிற்றில் வாயு சேர்வதால் ஆகும்.
(4) ஒருநாட் கோழிக் குஞ்சுகளில் ஆகும்.
(5) கோழிகளின் உணவுக் கால்வாய்த் தொகுதியின் பகுதிகளில் ஆகும்.

43) புறொயிலர் வகை கோழி வளர்ப்பில் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நடவடிக்கையாக **அமையாதது**
(1) கோழிகளை உயிருடன் விற்பனை செய்வதை விடுத்து துப்பரவாக்கி விற்பனை செய்தல்
(2) சந்தைக் கேள்வி தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்
(3) உற்பத்தியின் தரம் தொடர்பாக கவனஞ் செலுத்தல்
(4) அதிக கொழுப்பு கொண்ட இறைச்சியை பொதி செய்து விற்பனை செய்தல்
(5) கோழி இறைச்சியை ஆறு மணித்தியாலங்களின் பின்னர் ஆழ்குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தல்

44) இலிப்போட்டிக்கு நுண்ணங்கிகளினால் இலிப்பிட்டுக்களின் கட்டமைப்பு அலகுகள் உடைக்கப்படும் தொழிற்பாடு
(1) கரமலாக்கம்
(2) பாண்டலடைதல்
(3) மெலட் தாக்கம்
(4) ஒட்சியேற்றம்
(5) நொதித்தல்

45) சேணைப் பயிர்ச்செய்கை தொடர்பாகத் தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானது
(1) அலகு பரப்பில் கிடைக்கும் விளைச்சல் அதிகம்
(2) மண்ணிற்கு சேதனப் பசளை இடப்படுவதால் மண் இயல்புகள் மேம்படும்
(3) மண் $pH$ பேணப்படுவதால் தாவரங்கள் போசணையை உயர் அளவில் பெற்றுக்கொள்ளும்
(4) சூழலில் உயிர்ப் பல்வகைமை பேணப்படும்
(5) மண் போசணைப் பொருட்கள் வாயுவாக மாறி மண்ணிலிருந்து அகற்றப்படும்.

46) அரசாங்கம் குறித்த ஒரு பொருள் மீது உயர்ந்தபட்ச விலையை விதித்தது. இதன் மூலம் அடிப்படையாக எதிர்பார்க்கப்படுவது

(1) பொருட்களிற்கான வரியை அறவிடுதல்
(2) உற்பத்தியாளரைப் பாதுகாத்தல்
(3) குறித்த பொருளின் இறக்குமதியை அதிகரித்தல்
(4) அரசாங்கம் இடையிட்டுப் பொருட்களை கொள்வனவு செய்தல்
(5) அப்பொருளின் ஏற்றுமதியை அதிகரித்து நாட்டில் பற்றாக்குறையை உருவாக்கல்

47) பண்ணையாளர் ஒருவர் தன்னிடமுள்ள பணத்திற்கு முட்டை அடைப்பொறி இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்கின்றார். அதில் அடைவைத்து குஞ்சுகளை விற்பனை செய்யும் நோக்கில் ஊர் மக்களிடமிருந்து தரமான முட்டைகளை கொள்வனவு செய்கின்றார். இங்கு தாங்கப்படும் கிரய வகைகள் முறையே

(1) நிலையான கிரயமும் மொத்த கிரயமும்
(2) நிலையான கிரயமும் மாறும் கிரயமும்
(3) மாறும் கிரயமும் எல்லை கிரயமும்
(4) எல்லை கிரயமும் மொத்த கிரயமும்
(5) மொத்த கிரயமும் மாறும் கிரயமும்

48) சந்தை ஒன்றில் நெல்லிற்கான கேள்வி $Q_d = 140 - 2p$ ஆகக் காணப்பட்டது. சந்தைச் சமநிலையில் நிரம்பல் $Q_s = 100$ ஆகும். சமநிலையில் நெல்லிற்கான கேள்வி விலை நெகிழ்ச்சி யாது?

(1) $-0.4$ (2) $0$ (3) $0.5$ (4) $1$ (5) முடிவிலி

49) சம உற்பத்தி வளையி காட்டும் தொடர்பானது

(1) உள்ளீடு - வெளியீடு
(2) வெளியீடு - வெளியீடு
(3) உள்ளீடு - உள்ளீடு
(4) உள்ளீடு - வருமானம்
(5) உற்பத்தி - வருமானம்

50) முதலான நிலப்பண்படுத்தலில் பிரதான நோக்கங்கள்

A - எழுந்தமான கரட்டுத் தன்மையை அதிகரிப்பதற்கு
B - தோற்ற அடர்த்தியை அதிகரிப்பதற்கு
C - துண்டுளைத் தன்மையை அதிகரிப்பதற்கு

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானது / சரியானவை

(1) A மாத்திரம்
(2) A, B மாத்திரம்
(3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம்
(5) A, B, C எல்லாம்